25.8.2025

அ.வ.எண்.91/2020

வா.சா.1 தமிழ்ச்செல்வி க/பெ. சீனிவாசன்

முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2ம் வாதியும் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். இறந்துபோன எனது சகோதரர் சண்முகம் B.A., வரை படித்துள்ளார். முதல் பிரதிவாதி B.Com., வரை படித்துள்ளார். எனது தந்தை குப்புசாமி ராசிபுரம் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக பணியாற்றி 1982ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றார். எனது தாயார் எப்போது இறந்தார் என்றால் தேதி ஞாபகமில்லை 12ஆண்டுகள் இருக்கும். எனது தந்தையுடன் உடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரிகள் ஒரு சகோதரர் ஆவார்கள். எனது தகப்பனாருடன் உடன்பிறந்தவர்கள் 2 சகோதரர்கள் என்றால் ஒருவர் இறந்து விட்டார். எனது தந்தை மற்றும் அவரது சகோதர, சகோதரரிகள் பாக பிரிவினை மேற்கொண்டபோது இறந்துபோன சகோதரரின் மனைவிக்கு பாகம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். பாக பிரிவினையில் எனது பெரிய அத்தைக்கு நகை கொடுத்தார்கள், சின்ன அத்தைக்கு நிலம் 1.1/2 ஏக்கர் கொடுத்தார்கள். எனக்கு திருமணம் 1980ம் ஆண்டு நடந்தது. எனது சகோதரிக்கு 1985ம் ஆண்டு திருமணம் நடந்திருக்கும். பிரதிவாதி பெருமாள் குடியிருக்கும் வீடானது இந்த வழக்கில் சம்மந்தப்படாத சொத்து என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு தொடர்புடைய இரண்டு வீடுகளை முதல் பிரதிவாதி வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்தை முதல் பிரதிவாதி குத்தகைக்கு விட்டுள்ளார். வழக்கு சொத்தில் ஓட்டு வீடு ஒன்று உள்ளது மற்றும் பந்தல் வேலை செய்யும் மூங்கில் வைக்க வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அப்பா உயிருடன் இருக்கும் போதே முதல் பிரதிவாதி வாடகைக்கு விட்டு வாடகை வாங்கி வருகிறார். வழக்கு சொத்தில் விளம்பர பலகை ஒன்று வாடகைக்கு வைக்கப்பட்டு ஆண்டுக்கு ரூ.10ஆயிரம் முதல் பிரதிவாதி வாடகை வாங்கி வருகிறார். எனது அப்பா விளம்பர பலகை வாடகையை வாங்கி வந்தார். தற்போது முதல் பிரதிவாதி இந்த வாடகையை வாங்கி கொள்கிறார். 2ம் பிரதிவாதிக்கு திருமணத்திற்கு நகை எவ்வளவு கொடுத்தார்கள் என்றால் உறவினருக்கு திருமணம் செய்து வைத்ததால் நகை போடவில்லை சீர்வரிசை மட்டும் செய்தார்கள். வழக்கிற்றாக நகை போடவில்லை என்று சொல்கிறேன் என்றும் திருமணத்தின் போது எங்களுக்கு தலா 50பவுன் நகை கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய மகன்கள் தற்போது சென்னையில் வேலைபார்த்து வருகிறார்கள். அவர்கள் சென்னையில் 7 ஆண்டுகளாக வேலை பார்த்து வருகிறார்கள். மலையாம்பட்டியில் வீடு உள்ளது பழையவீடு தவிர புதியவீடு ஒன்று கட்டியுள்ளேன். எனது தந்தை எவ்வளவு ஓய்வூதியம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தையின் பெயரில் 4 முதல் 5 வங்கிகளில் வைப்பீடுகள் செய்யப்பட்டு தற்போதும் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் இறப்பதற்கு முன்னரே நான் சென்னை சென்றதால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் வாதிக்கு அந்த வைப்பீடு பற்றி தெரியுமா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த போது தான் 2ம் வாதியுடன் நான் பேச்சவார்த்தை கொண்டேன். அதற்கு முன் 2ம் வாதியிடம் மற்றும் மற்றவர்களுடன் எனக்கு தொடர்பில்லை

நான் சென்னை சென்று விட்டேன். வழக்கு சொத்தில் போர் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, நான் வழக்கு சொத்திற்கு சென்று 15ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. வைப்பீடு தொடர்பாக வங்கிக்கு ஆட்சேபணை அனுப்பியிருந்தால் அது என்னால் அனுப்பப்பட்டதல்ல. வைப்பீடு இருப்பது பற்றி எனது அப்பா என்னிடம் சொல்லியுள்ளார். எனது தந்தை இராசிபுரம் ஸ்டேட் வங்கியில் ஓய்வூதியம் பெற்று வந்தார். எனது தந்தைக்கு அவரது குடும்பத்தில் ஏற்பட்ட பாகபிரிவினையில் கிடைத்த சொத்துக்களை அவர் தான் விவசாயம் செய்து வந்தார். எனது தந்தைக்கு பாக பிரிவினையில் கிடைத்த சொத்து என்பதால் அந்த சொத்தை பொறுத்து அவர் யாருக்கு வேண்டுமானாலும் எழுதி வைக்கலாம் என்றால் சரியல்ல. எனது தந்தை, முதல் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் கடந்த 15.5.2013ம் தேதியில் வழக்கு சொத்தை பொறுத்து ஒரு வாய்மொழி பாகபிரிவினை செய்து கொண்டு தனியாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அப்படி பாக பிரிவினை ஏற்பட்டதால் தான் முதல் பிரதிவாதி வாடகை வாங்கி வருகிறார் என்றால் சரியல்ல. எனது தந்தை வழக்கு சொத்தை பொறுத்து முன்பே ஏற்பாடு செய்து விட்டதால் வழக்கு சொத்தில் எனக்கும், 2ம் வாதிக்கும் பங்கு கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தில் என்ன பயிரிடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நானும், 2ம் வாதியும் வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்பதால் வழக்கு மதிப்பீடு மற்றும் நீதிமன்ற கட்டணம் தவறு என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒம்/- சீ.தமிழ்ச்செல்வி

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.